# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2006 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, கண்டிய திருமண, மணநீக்கம் (திருத்தச்) சட்டம்

---

*(2006 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2006, நவெம்பர் மாதம் 10 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 4.75** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2006 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, கண்டிய திருமண, மணநீக்கம் (திருத்தச்) சட்டம்

*[2006 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]*

*ச. வ. ஓ. 61/2000*

### 113 ஆம் அத்தியாயமான கண்டிய திருமண, மணநீக்கச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம் 2006 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, கண்டிய திருமண, மணநீக்க (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப்பெயர்.*

**2.** 113 ஆம் அத்தியாயமான கண்டிய திருமண, மணநீக்கச் சட்டத்தின் 41 ஆம் பிரிவு, அதன் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— *113 ஆம் அத்தியாயத்தின் 41 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"(4) ஆளொருவர் –

(அ) பாராளுமன்ற உறுப்பினரொருவராகவரின் ; அல்லது

(ஆ) ஒரு மாகாண சபையின் உறுப்பினரொருவராகவரின் ; அல்லது

(இ) உள்ளூரதிகார சபையொன்றின் உறுப்பினரொருவராகவரின் ; அல்லது

(ஈ) குடியரசின்கீழ் பணக்கொடுப்பனவுடன்கூடிய பதவியொன்றைத் தாங்குகின்றாராயின் ;

(உ) பதிவாளரின் கடமைகளை பங்கமாகப் பாதிக்கும் உயர்தொழிலில் ஈடுபடுகின்றாராயின்,

அவர் பதிவாளர் ஒருவராக நியமிக்கப்படுவதினின்றும் அல்லது தொடர்ந்திருப்பதினின்றும் தகைமை இழந்தவராதல் வேண்டும்.

(5) எவரேனும் பதிவாளர் (4) ஆம் உட்பிரிவின் பயனைக் கொண்டு தகைமை இழந்தவராகவருமிடத்து, பதிவாளர் தலைமையதிபதி, அமைச்சரின் அங்கீகாரத்துடன் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அத்தகைய பதிவாளரைப் பதவியிலிருந்து அகற்றுவதற்குத் தத்துவமுடையவராதல் வேண்டுமென்பதுடன் என்பதுடன், அத்தகைய அகற்றுதலானது, கட்டளையில் குறித்துரைக்கப்படும் தேதியன்று பயனுறுதலும் வேண்டும்.

(6) ஏதேனும் பதவிதுறத்தலின் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதலின் விளைவாக பதிவாளர் பதவியில் வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில், 41 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறு ஆளொருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*